அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 12/2005 (III)

எனது இல: EST-7/ INSURE/04/3500
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
2012.02.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான புதிய காப்புறுதித் திட்டத்தினைத் தாபித்தல் (அக்ரஹார)**

மேற்படி விடயம் குறித்து வெளியிடப்பட்ட 2005.05.18 ஆம் திகதிய 12/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மீது தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி சுற்றறிக்கையின் 01 ஆம் பின்னிணைப்பின் I ஆம் பகுதியின் கீழ் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட குடும்ப அலகு பின்வரும் விதத்தில் இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.

**திருமணம் செய்துள்ள பணியாளர்கள்:** உறுப்பினர், வாழ்க்கைத் துணை மற்றும் 21 வயதுக்குக் கீழ் உள்ள வேலையற்ற அத்துடன் திருமணமாகாத பிள்ளைகள், அத்துடன் 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ள திருமணமாகாத, வேலையற்ற அத்துடன் முழுமையாக அங்கவீனமாக உள்ள பிள்ளைகள்.

03. 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ள முழுமையாக அங்கவீனமாக உள்ள வேலையற்ற, திருமணமாகாத பிள்ளைகளின் வைத்தியசாலை மற்றும் மருத்துவக் கட்டணங்களுக்காக அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ், மீளளிக்கக்கூடிய உரிமை வழங்கலின் நோக்கத்திற்காக, நிறுவனத் தலைவர் அத்தகைய பிள்ளைகளின் மிக அண்மையதான நோயறிகை அட்டையினை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேலும் குறிப்பிடப்பட்ட பிள்ளை 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ளார் என்பதுடன் அவர் திருமணமாகாத, வேலையற்ற அத்துடன் முழுமையாக அங்கவீனமாக உள்ளார் என்று அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அதே நேரத்தில், பிள்ளை தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையாகவும் சரியாகவும் உள்ளன என்று பயனுறுவதற்கு குறித்த கிராம உத்தியோகத்தரிடம் இருந்து பெறப்பட்ட சான்றிதழொன்று தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

04. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ.வீ. அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.